# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 68/10—1979 දෙසැම්බර් 26 වැනි බදාදා—1979.12.26

68/10 ம் இலக்கம்—1979 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டபிள்யு. எம். ஏ. விஜேரட்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, திசம்பர் 26, 1979.

**கட்டளைச்சட்டம்**

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொழிலாளர் கல்விக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. நீக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1975, நவம்பர் 05 ஆம் தேதிய 188/10 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 140 (2) ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம் ஒன்றெனக் கருதப்பட்டதுமான தொழிலாளர் கல்வி கட்டளைச்சட்டம், மேற்கூறிய நியதிச்சட்டத்தின்கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், தொழிலாளர் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்நிறுவகம் இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும்; இப்பல்கலைக்கழகம் இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்.

5. இக்கட்டளைச்சட்டத்தில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, நிறுவகமானது, பல்கலைக்கழகம் தொடர்பாகப் பல்கலைக்கழகத்துறையொன்றின் அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனமொன்றின் துறையினது நிருவாகத்திற்கும் முகாமைக்கும் ஏற்புடையனவான அல்லது அதனோடு இயைபுள்ளனவான, சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் நிருவாகம், முகாமை ஆகியவற்றிற்கும், அவை தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கும் அமைய நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்பேரில், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடிய வாறாகத் தொழிலாளர் கல்வியின் அத்தகைய கற்கைக் கிளைகளில் போதனை, பயிற்சி என்பவற்றிற்கு ஏற்பாடுசெய்தல் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கிளைகளில் வழங்கப்பட வேண்டிய திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் தீர்மானித்தல் ;

(ஈ) தொழிலாளர் கல்வியின் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு கற்கைக் கிளைகளிலும் தேர்ச்சிபெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்கெனப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு தேர்வுகள் நடாத்துதலும், அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்திருப்பதோடு, நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்திசெய்துள்ள ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை வழங்குதற்குத் தகவுடையரெனப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தலும் ;

(உ) ஆசிரியர், மாணவர், கல்விமான்கள் ஆகியோரைப் பரிமாற்றுவதன்மூலம் அல்லது வேறுவகையில் நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த நோக்கங்களைக் கொண்டவையும் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையும் ஆன பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஊ) துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி இடங்களிலும், நிறுவகத்திற்கு அனுமதிகோரும் ஆட்கள் அல்லது நிறுவகத்திலுள்ள மாணவர்கள் சித்தியடைந்த தேர்வுகளையும் அவர்களது கல்விக் காலங்களையும் அல்லது கற்கைக் காலங்களையும் நிறுவகத்தின் அத்தகைய தேர்வுகட்கும் கல்விக் காலங்களுக்கும் அல்லது கற்கைக் காலங்களுக்கும், அல்லது அவற்றின் அத்தகைய பாகங்கட்கும் சமமானவை என அங்கீகரித்தலும் எந்நேரத்திலும் அவ் அங்கீகாரத்தைக் கைமீட்டலும் ;

(எ) நிறுவகத்தின் நோக்கத்திற்காக நூலகங்களையும் ஆய்கூடங்களையும் வேறு கட்டிடங்களையும் போதிக்கும் நோக்கத்துக்காகவோ, பயிற்சி நோக்கத்துக்காகவோ, ஆராய்ச்சி நோக்கத்துக்காகவோ நிறுவுதலும், சாதனமளித்தலும் பேணுதலும் ;

(ஏ) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர்கள் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடிய வேறு பதவிகள் என்பவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல், இடைநிறுத்திவைத்தல் என்பன தொடர்பாகப் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப்பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும், வேறு பரிசில்களையும் நிறுவுதலும் வழங்குதலும் ;

(ஒ) கற்கைநெறிகளை அல்லது கற்கைநெறிப் பாகங்களை வேறு உயர் கல்வி நிறுவனங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யும் எவையேனும் துணைவிதிகட்கு இணங்க அவற்றை நடாத்த ஒழுங்குகள் செய்தல் ;

(ஓ) கட்டணங்களைக் கோரிப் பெற ஏற்பாடுசெய்யும் ஏதேனும் விதிக்கிணங்கக் கட்டணங்களைக் கோருதலும் பெறுதலும் ; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் அவை மேற்கூறிய தத்துவங்களின் இடைநேர் விளைவானவையாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, செய்தல்.

7. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :—

(i) பணிப்பாளர் ; அத்துடன்

(ii) எந்தப் பதவியை வகிப்பவர் இந்தப் பந்தியின் நோக்கத்துக்காக ஓர் அலுவலராக இருக்கிறாரோ அந்தப் பதவி எனக் கட்டளைச்சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பதவியை வகிப்பவர்.

8. (1) முதலாவது பணிப்பாளரைப் பல்கலைக்கழகப் பேரவை நியமித்தல் வேண்டும். அடுத்துவரும் ஒவ்வொரு பணிப்பாளரும் பல்கலைக்கழகப் பேரவையினாலேயே நியமிக்கப்படல் வேண்டும் ; ஆனால் நிறுவகத்தின் கல்விசார் கூட்டவை விதந்துரைத்த மூன்று பேர் அடங்கிய குழுவிலிருந்தே நியமிக்கப்படல் வேண்டும்.

(2) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நிறுவனம் அவ்வாறு நியமிக்கப்பட்ட அத்தகைய பணியாட்டொகுதி உறுப்பினரைப் பணிப்பாளர் பதவி ஏற்கவென விடுவித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பணிப்பாளரும் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உட்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதிக்கு அல்லது அவர் தமது அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவு செய்யும்வரை இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அதுவரை, பதவிவகித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பணிப்பாளரும் அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட ஒரு விசேட கூட்டத்தில் கல்விசார் கூட்டவையின் மொத்த உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கினர்க்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டிப்பு வாக்கின்பேரில், பல்கலைக்கழகத் துணைவேந்தரினால் பதவியிலிருந்து அகற்றப்படல் வேண்டும்; அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமாகவிருக்கும் உறுப்பினர், பணிப்பாளர் அல்லாத வேறு ஆள் ஒருவரை அத்தகைய விசேட கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனத் தம்முள்ளிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்.

(5) பதவிதுறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பணிப்பாளர் ஒவ்வொருவரும், பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு உடன் முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருந்தால், அவர்தம் அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவாக்கியிராவிடின் அத்தகைய உயர் கல்வி நிறுவனத்திலுள்ள தமது நிலையான பதவிக்கு மீண்டும் செல்லலாம்.

(6) பணிப்பாளர் ஆனவர், லீவு, சுகவீனம், இலங்கையிலில்லாமை காரணமாக அல்லது வேறு காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத்தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், பல்கலைக்கழகத் துணைவேந்தர், அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடத்துதற்குத் தகுந்தவையென அவர் கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், பல்கலைக்கழகத் துணைவேந்தர், (2) ஆம் உட்பந்தியின்கீழ் ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும்வரை, அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டுநடாத்துதற்குத் தகுந்தவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்; அத்தகைய ஒழுங்குகளைச் செய்யும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர் அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

9. (1) பணிப்பாளர் நிறுவகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அந்நிறுவகத்தின் கல்வி, நிருவாகத் தலைவராக இருத்தலும் வேண்டும். அவர் கல்விசார் கூட்டவையின் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைச்சபையினதும் பதவிவழி உறுப்பினராக இருத்தலும் வேண்டும். நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளித்துப் பேசுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினராயிருந்தாலன்றி அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(2) பல்கலைக்கழகப் பேரவையால் அதற்கெனப் பணிப்பாளருக்குக் காலத்துக்குக் காலம் சட்டமுறையாக விடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகட்கிணங்க, சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளை, அவை நிறுவகத்தோடு தொடர்புபட்ட அளவுக்கு, முறையாகக் கடைப்பிடித்தலை உறுதிசெய்தல் பணிப்பாளரது கடமையாதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்துக்கு அவசியமென அவர் கருதக் கூடியனவான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பணிப்பாளர் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அவர் அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(3) கல்விசார் கூட்டவையின் முடிவுகளுக்குப் பயனளித்தல் அல்லது பயனளித்தலை உறுதிப்படுத்தல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளரே நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராயிருத்தல் வேண்டும்.

(5) நிறுவகத்தின் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பணிப்பாளரே பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும்.

10. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(i) கல்விசார் கூட்டவை ;

(ii) கற்கைச்சபை அல்லது கற்கைச்சபைகள் :

(iii) அத்தகைய அதிகாரசபைகளாகவிருப்பதற்கெனக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு குழுக்கள்.

11. கல்விசார் கூட்டவை (அது இதனகத்துப்பின்னர் " கூட்டவை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் கல்விசார் அதிகாரசபையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர் :— அதாவது

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் கலைத்துறைத் தலைவர் ;

(இ) பல்கலைக்கழகத்தின் கல்வித்துறைத் தலைவர் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் இயற்கை அறிவியல்துறைத் தலைவர் ;

(2) பின்வரும் மற்றைய உறுப்பினர் :— அதாவது

(அ) நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைச்சபையினதும் உறுப்பினர்கள் ;

(ஆ) நிறுவகத்தோடு இயைபான கற்கைக் கிளைகளில் சிறப்புச் சேவையாற்றிய ஆட்களுலிருந்து ஆணைக்குழு நியமித்த எட்டு உறுப்பினர்.

12. (1) பணிப்பாளரே கூட்டவையின் தவிசாளராதல் வேண்டும் ; அவரே கூட்டவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைவகித்தல் வேண்டும் ; ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் தலைமை வகிக்க இயலாதவராயிருப்பின், உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்த எவரேனும் உறுப்பினரைத் தலைமைவகிக்கவெனத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் முன்னரே பதவியை வறிதாக்கினலொழிய. விடயத்துக்கேற்ப அவரின் நியமனத் தேதியிலிருந்து. கணிக்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்கினல், அவரை அடுத்து வருபவர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) கூட்டவையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதன்மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(4) வராமைக்கு லீவின்றி கூட்டவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சமூகமளிக்கத் தவறின், அவர் கூட்டவை உறுப்பினர் என்ற தம் பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதனல் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புதற்கு ஆணைக்குழு தக்கவோர் ஆளை நியமித்தலும் வேண்டும்.

(5) கூட்டவையின் உறுப்பினர் ஒருவர் எந்த ஊதியத்துக்கும் உரித்துடையவராதலாகாது ; ஆனல் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் கொடுக்கப்படலாம்.

(6) கூட்டவையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கினராக இருத்தல் வேண்டும்.

(7) கூட்டவை அவசியமாகும் போதெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறுயினும், ஓர் ஆண்டுக்கு எட்டுத் தடவைகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(8) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும்போதெல்லாம் அல்லது கூட்டவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப்பெறுவதன்மேல் ஒரு வாரத்துக்குள், கூட்டவையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

13. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டவையானது நிறுவகத்திலுள்ள போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாட்டையும் அவற்றின் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியினல் கூட்டவைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி கூட்டவையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறை வேற்றுதலும் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் ஆண்டு அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும் அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும்

(ஆ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும் ;

(இ) சம்பந்தப்பட்ட கற்கைச்சபையுடன் அல்லது கற்கைச்சபைகளுடன் கலந்து ஆலோசித்து அங்கீகரிக்கப் பட்ட கற்கைக் கிளைகளில் வழங்கப்படவேண்டிய திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச்சிறப்புக்கள் ஆகியவற்றையும், அத்தகைய திப்புலேளாமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச்சிறப்புக்கள் ஆகியவற்றுக்குத் தகைமை பெற விரும்பும் மாணவர் பின்பற்ற வேண்டிய கற்கைநெறிகளையும் பயிற்சியையும், சித்தியடைய வேண்டிய தேர்வுகளையும் திருப்திசெய்ய வேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஈ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கரு மத்துக்காகத் துணைவிதிகளை வரைதலும் சட்டமாக்கப்படுவதற்காகப் பல்கலைக்கழகப் பேரவைக்கு அத்தகைய வரைவுகளைச் சமர்ப்பித்தலும் :

ஆயின், எவ்வாறுயிறும் கற்கைச்சபை அல்லது கற்கைச் சபைகள் அளிக்கும் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர் அன்றி, சம்பந்தப்பட்ட கற்கைநெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான துணைவிதி எதுவும் வரையப்படலாகாது ;

(உ) சம்பந்தப்பட்ட கற்கைச்சபை அல்லது கற்கைச்சபைகள் அளிக்கும் அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்ன்ர், கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழக மூதவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) எக்கருமம் தொடர்பாக விதிகள் ஆக்கப்படவேண்டும் அல்லது விதிகளை ஆக்கலாம் என அதிகாரம் அளிக்கப்பட்டதோ அக்கருமம் தொடர்பாக விதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளை விடயத்திற்கேற்றவகையில் சட்டமாக்குவதற்காகப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கோ அல்லது மூதவைக்கோ சமர்ப்பித்தலும் ;

(எ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டுநடாத்துதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங் கள், சாதனங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஏ) பல்கலைக்கழகத்துக்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(அ) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக் கூடியனவான வேறு பதவிகள் ஆகியவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல், அல்லது இடைநிறுத்தி வைத்தல் ; அத்துடன்

(ஆ) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்கள், அலுவலர்கள், மற்றைய ஊழியர்கள் ஆகியோரின் தகைமைகள் ;

(ஐ) நிறுவகத்தின் ஊழியத்திலுள்ள ஆட்களை இடைநிறுத்திவைத்தல். விலக்குதல் அல்லது வேறு வகையில் தண்டித்தல் பற்றிப்பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ஒ) நிறுவகத்தின் ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக ஏற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான அத்தகைய ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ஓ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது கற்கைச் சபைகளின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(அ) இப்போதுள்ள கற்கைச்சபைகளை மீளவமைத்தல், புதிய கற்கைச்சபைகளை அமைத்தல் ஆகியவற்றுக்கான திட்டங்கள் ; அத்துடன்

(ஆ) கற்கைக் கிளைகளை அந்தந்தக் கற்கைச்சபைகளுக்குக் குறித்தொதுக்குதல் ;

(ஔ) தகுந்ததவையென அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தல், அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தல், அவற்றின் அறிக்கைகளை ஆய்தலும் திரிபுகளுடனோ திரிபுகளின்றியோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தல் ;

(க) சம்பந்தப்பட்ட கற்கைச்சபையின் அல்லது கற்கைச்சபைகளின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக் கழகம், ஆணைக்குழு ஆகியவற்றின் ஒருப்பாட்டுடனும் கற்கைநெறிகட்கு மாணவரை அனுமதிப் பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(ங) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் அவற்றைப் பிரயோகிப்பதற்கு வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்படாதுள்ள நிறுவகத்தின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித் தல் :

ஆயின், கூட்டவையானது, ஏதேனும் கல்விசார் விடயம் பற்றித் தோதான கற்கைச்சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து கூட்டவைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அக் கற்கைச்சபைக்கு முதலில் கொடுத்திருந்தாலொழிய, கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் கூட்டவையினால் நிறைவேற்றப்படலாகாது :

ஆயின், மேலும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி அவ்வாறு நிறைவேற்றப்பட்ட எத்தீர்மானத்தின்மீதும் செயலாற்றுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார் விடயம்" என்பது தோதான கற்கைச் சபையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்புக்கும் அமைந்த ஏதேனும் விடயம் என்று பொருளாகும்.

14. கூட்டவையினதும், பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு கற்கைக் கிளைக்கும் நிறுவகமானது ஒரு கற்கைச் சபையைத் தாபித்தல் வேண்டும்.

15. (1) ஒவ்வொரு கற்கைச் சபையும் ஒரு தவிசாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர் அச்சபையின் நிருவாகத் தலைவராயும் கல்விசார் தலைவராயும் இருத்தல் வேண்டும் ; அவர் பணிப்பாளரின் விதப்புரையின் பேரில் அந்தச் சபையிலுள்ள ஆசிரியர்களுலிருந்து கூட்டவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சபையின் தவிசாளரும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) லீவு பெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக, அல்லது வேறு காரணத்துக்காக, ஒரு தவிசாளர் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து, அத்தகைய காலத்துக்குத் தவிசாளர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காகச் சம்பந்தப்பட்ட சபையின் ஓர் ஆசிரியரைப் பணிப்பாளர் நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், தவிசாளர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவிதுறக்குமிடத்து அல்லது வேறு காரணத்துக்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயிருக்குமிடத்து, தவிசாளர் பதவியானது வறிதாகியுள்ளதெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உப்பந்திக்கிணங்க, புதிய தவிசாளர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

16. (1) ஒவ்வொரு கற்கைச்சபையும் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளர் ;

(ஆ) பணிப்பாளர் ; அத்துடன்

(இ) சம்பந்தப்பட்ட கல்விக் கிளையில் நிறுவகத்தில் போதிப்போருளிருந்து ஐவருக்கு மேற்படாதோரும் பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்பட்டோருமான கற்கைச்சபையின் அத்தகைய ஆசிரியர்களும், வேறு பணியாட்டொகுதியினரும்.

(2) ஏதேனும் கற்கைச்சபை கூட்டவையின் ஒருப்பாட்டுடன் குறித்த ஒரு நோக்கத்திற்காகவும் குறித்த ஒரு காலப்பகுதிக்கும் ஒருவரை அல்லது ஒருவர்க்கு மேற்பட்ட ஆட்களை உடன்சேர்க்கலாம் ; ஆனால் அவ்வாறு உடன் சேர்க்கப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அத்தகைய சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) பன்னிரண்டாம் பந்தியின் (2) ஆம் உப்பந்தியின் ஏற்பாடுகள், ஏதேனும் கற்கைச்சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவர்க்கும், ஒவ்வொருவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்,

(4) ஒவ்வொரு கற்கைச்சபையும் ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர் (1) ஆம் உப்பந்தியில் (இ) என்னும் வாசகத்தின்கீழ், அந்தச் சபையால் அதன் உறுப்பினருளிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(5) ஏதேனும் கற்கைச்சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண், உடன்சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவரேனும் இருந்தால் அவர் நீங்கலாக, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கற்கைச்சபையும் அவசியமாகும்போதெல்லாம் கூடுதல்வேண்டும் ; எவ்வாறாயினும், ஓர் ஆண்டிற்குப் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

17. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு கற்கைச்சபையும் சம்பந்தப்பட்ட கல்விக் கிளையிலுள்ள போதனை, கல்வி ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச்சபையும், (1) ஆம் உட்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சம்பந்தப்பட்ட கல்விக் கிளை தொடர்பாகப் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள், ஆகியவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) கூட்டவை அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் ஒரு கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து அறிக்கைசெய்தல் ;

(ஆ) குறித்த கல்விக் கிளையிலுள்ள கற்கைநெறிகள், கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள், தேர்வுகள் என்பன சம்பந்தமான எல்லாக் கருமங்கள் பற்றியும் கூட்டவைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தல் ;

(இ) சிறப்பான ஏதேனும் விடயத்தை அல்லது விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து அதன்மீது அல்லது அவற்றின்மீது அறிக்கை செய்யும் நோக்கத்திற்காக கற்கைச்சபை உறுப்பினர் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவற்றுக்கு மாணவரை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைக் கூட்டவைக்கு விதந்துரைத்தல் ;

(உ) குறித்த கல்விக் கிளையிலுள்ள கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளைக் கூட்டவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) ஆசிரியர்கள், தேர்வாளர்கள் என்போராக ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான அத்தகைய ஆட்களைக் கூட்டவைக்கு விதந்துரைத்தல் ;

(எ) அந்தக் கல்விக் கிளையில் விதித்துரைத்த தேர்வுகளில் சித்தியடைந்தவராயும், அத்துடன் விதந்துரைத்த வேறு நிபந்தனைகளைத் திருப்திசெய்தவராயும், அந்தக் கிளையில் டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவை அளிக்கப்படுவதற்குத் தகவுடையவரான ஆட்களைக் கூட்டவைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசில்கள் ஆகியவற்றுக்கான போட்டிக்குரிய முறையையும் நிபந்தனைகளையும் கூட்டவைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசில்கள் ஆகியன அளிப்பதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைக் கூட்டவைக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஒ) கூட்டவைக்குப் பின்வருவன பற்றி விதந்துரைத்தல் :—

(அ) இப்போதுள்ள கற்கைச்சபைகளை மீளவமைத்தல், புதிய கற்கைச்சபைகளை அமைத்தல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் ;

(ஆ) கல்விக் கிளைகளை அந்தந்தக் கற்கைச்சபைகட்குக் குறித்தொதுக்குதல்.

18. (1) நிறுவகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பாடநெறிகள் அல்லது பாடநெறிகளின் பாகங்கள் நடாத்தப்படும் ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்தினதும் பிரதான நிறைவேற்று அலுவலரின் ஒருப்பாட்டுடன், பணிப்பாளர், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தினதும் பணியாட்டொகுதி உறுப்பினர்களுளிருந்து ஓர் இணைப்பாளரை நியமித்தல் வேண்டும்.

(2) இணைப்பாளர், உயர் கல்வி நிறுவனத்தினுள், நிறுவனத்தின் கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள், தேர்வுகள் என்பனவற்றை ஒழுங்குசெய்வதற்கும் நிருவகிப்பதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் இணைப்பாளரும் அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, மீளநியமிக்கப்படுதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(4) லீவு பெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக, அல்லது வேறு காரணத்துக்காக ஓர் இணைப்பாளர் ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து, அத்தகைய காலத்துக்கு இணைப்பாளர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் கலந்தாலோசனையுடன் அவ் உயர் கல்வி நிறுவனத்தின் வேறு ஒரு பணியாட்டொகுதி உறுப்பினரைப் பணிப்பாளர் நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், இணைப்பாளர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவிதுறக்குமிடத்து அல்லது வேறு காரணத்துக்காக ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயிருக்குமிடத்து, இணைப்பாளர் பதவியானது வறிதாகியுள்ளதெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உட்பந்திக்கிணங்க, புதிய இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

19. அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ அதுவே நிறுவகத்தின் நிதி ஆண்டாதல் வேண்டும்.

20. (1) நிறுவகமானது "தொழிலாளர் கல்வி நிதியம்" (அது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) என அழைக்கப்படும் ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அந்நிதியத்தினுள் பின்வருவன செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) நிறுவகத்தின் உதவிக்கான மானியங்களாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டவையும் ஆணைக் குழுவினால் செலவழிக்கப்பட்டவையுமான பணங்கள் ; அத்துடன்

(ஈ) எவ்வகை மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையான நிறுவகத்துக்குரிய வேறெல்லாப் பணங்களும்.

(2) குறித்த ஒரு மாத காலத்துள் நிதியத்துள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய பொழிப்பு தோதான வருவாய்த் தலைப்புகளின்கீழ் வகுக்கப்பட்டு, ஆணைக்குழுப் பணிப்பாளரால் ஆணைக்குழு அறிவதற்காக அடுத்துவரும் மாதத்தின் முடிவிற்குள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

21. பணிப்பாளர் பின்வரும் கடமைகளை உடையவராய் இருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த கணக்குத் தலைப்புகளில் வரவு வைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழு தேவையெனக் கோரும் அத்தகைய மூன்றாண்டுக்கொரு முறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் கூட்டவைக்காகத் தயாரித்தல் :

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம், நிறுவகத்தின் கணக்குகளில் தனியாகக் கணக்குவைக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக, அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக் கொடைகள் எந்நோக்கத்துக்காக அல்லது எக்குறிக்கோளுக்காக முறையாக வழங்கப்பட்டதோ அந்நோக்கம் அல்லது அக்குறிக்கோள் அல்லாத வேறு நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக் காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படலுமாகாது.

22. (1) நிறுவகமானது, அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளையும் புள்ளிவிபரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்றொன்றை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலும், முறையிலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் அந்நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

23. ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கு இயைபாகவுள்ள சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வதற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

24. (1) நிறுவகத்தின் பணியாட்தொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகிய வற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டு டனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமென நிறுவகம் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர் களையும், ஆசிரியர்களையும், வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்தொகுதி பல்கலைக்கழகத்தால் அதன் சொந்தப் பணியாட்தொகுதியிலிருந்து விடு விப்பதன்மூலம் ஏற்பாடு செய்யப்படல்வேண்டும், அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவால் அல்லது பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்படல் வேண்டும். சட்டத்தின் X ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்தொகுதி யின் நியமனங்களுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் ஓர் அலுவலர், ஆசிரியர் அல்லது ஊழியர் முழுநேர அடிப்படையில் சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகமானது அவருக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள அவரது நிலையான பதவிக்கான சம்பளத்தையும் படிகளையும் கொடுத்தல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது ஊழியருக்கு, பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத் துடனும் அது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய படிகளை நிறுவகம் கொடுக்கலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவராதல் வேண்டும்.

25. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக எவரேனும் ஆள் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது உடன் சேர்க்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி, அல்லது எவரேனும் ஆள் அதன் உறுப்பினராகவிருப்பதற்கு உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழின், அக்கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும் ; அது பற்றிய ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாயிருத்தல் வேண்டும்.

26. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்றதாக்கப்படலாகாது.

27. இக்கட்டளைச் சட்டத்தில்—

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும் ;

"தோதான சாதனம்" என்பது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச் சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப் பொருள்படும் ;

"அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கிளை" என்பது நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் கல்வியோடு அல்லது பயிற்சியோடு இயைபான ஏதேனும் கல்விக் கிளையெனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி எனப் பொருள்படும் ;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது—

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனப் பொருள்படும் ;

(ii) ஒரு திறந்த வெளிப் பல்கலைக்கழகம் தொடர்பாக அந்தத் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனப் பொருள்படும் ; அத்துடன்

(iii) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

"ஆசிரியர் " என்பது பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர், விரிவுரையாளர் அல்லது உதவி விரிவுரையாளர் என, அல்லது எப்பதவியை வகிப்பவர் ஓர் ஆசிரியராக உள்ளாரோ அப்பதவியெனக் கட்டளைச்சட்டத்திறல் வெளிப்படுத்தப்பட்ட வேறேதேனும் பதவியை வகிப்பவர் எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.